# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | தமிழ் - I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - I

*01)* மேல்வரும் செய்யுள்களை வாசித்து, அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

i) காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென்வே லண்ணற் காணா வூங்கே
நின்னினும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே யென்றும்
உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினு மீத்த னன்றெ‌ன
மறுமை நோக்கி ன்றோ வன்றே
பிறர்வறுமை நோக்கின் றவன்கை வண்மையே

அ) இச்செய்யுட் பகுதியின் பொருளை இக்கால உரைநடையில் தெளிவாக எழுதுக.

ஆ) இங்கு ஆற்றுப்படை வடிவம் கையாளப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

இ) இச்செய்யுள் மூலம் விளங்கும் புறத்திணை இலக்கிய மரபுகளை எடுத்துக் காட்டுக.

ii) மூவ ராய்முத லாகி மூலம
    தாகி ஞாலமு மாகுமத்
தேவ தேவர் பிடித்த போர்வி
    லொடித்த சேவகர் சேணிலம்
காவன் மாமுடி சூடு பேரெழில்
    காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன முன்ன
    மலர்ந்த பங்கய ராசியே

அ) இச்செய்யுட் பகுதி இடம்பெறும் சந்தர்ப்பத்தை விளக்குக.

ஆ) பெண்களின் மகிழ்ச்சியும் அதற்குரிய காரணமும் புலப்படுமாற்றைத் துலக்குக.

இ) இப்பகுதியில் உவமையணி கையாளப்பட்டுள்ள சிறப்பினை எடுத்துக் காட்டுக.

ஈ) 'தேவ தேவர் பிடித்த போர்வில் ஒடித்த சேவகர் விழைவது யாது? *(24 புள்ளிகள்)*

02) ‘அ’ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியை படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) அருளின் முதலோன் அன்புடையோன்;
அகிலம் புரக்கும் எங்கோமான்
திருவார் மாந்தர் திருநாவில்
தேனாம் இனிய மொழிவைத் தோன்
உரவோன், அன்னான் திருநாமம்
உன்னி, இதனை ஓதுகிறேன்.

செய்யகருணைச் செழுஞ் சோதீ,
சிந்தை நீறி உழல் வாரும்
உய்ய அருளும்; உள் நொந்தார்
உருக அருளும்! ஒரு குரலில்
வையம் கொள்மா பேரரசும்
வழுத்தி இரக்கும் ஒரு சீமான்!
ஐய! கருணை யங்கடலில்
ஆடா தானின் பாடென்னே!

தன்னில் தானாம் நிலையுடையான்
தனியோர் ஆட்சி வலியுடையான்
தன்னை உணர்வார் அருகமைவான்
தனக்கே உரியார் துயர் களைவான்
அன்னோன் ஆற்றல் ஆழத்தை
அளந்தார் யாரே? அளப்பாரே!
ஒன்று மற்ற தொன்றாலே
உலகைச் செய்தான் என்னிறையே!

திரையின் பின்னால் நோக்குகிறான்
தீங்கின் பாலே திளைப்பார்க்குத்
துரும்பைக் கொண்டே பெருந்துன்பம்
தொடரச் செய்யும் மாவல்லோன்!
இருமை உலகும் அவனறிவில்
இரண்டு துளிகள் எனலாமே?
அருமை இறைவன் புகழங்கி
அறிவாம் கைக்கு வசமாமோ?

i) இக் கவிதையூடாகப் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயத்தைச் சுருக்கமாக விளக்குக.

ii) தான் வெளிப்படுத்த விழைந்த விடயத்தை விளக்குவதற்குக் கவிஞர் கையாண்ட உத்திகள் பற்றிக் கருத்துரை வழங்குக.

iii) இறைவனின் இயல்புகளையும் சிறப்புக்களையும் கவிஞர் எவ்வாறு சித்திரிக்கின்றார்?

iv) கவிதை வெளிப்பாட்டு முறையிலுள்ள சிறப்புக்களை மதிப்பிடுக.

**அல்லது**

ஆ) சயாம் அல்லது தாய்லாந்து போன்ற நாடுகளின் அரசாங்க விசேடங்களும் தேசிய விழாக்களும் குவாரிச் (*Quaritch*) போன்றவர்களால் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. தாய்நாட்டு மக்களின் தேசிய விழா ஓர் ஊசல் விழா (*Swing fastival*) ஆகும். வங்காள ஆசிரியர்கள் இதனை வங்காளத்தில் கிருஷ்ணனுக்காகக் கொண்டாடப் பெறும் ஊஞ்சல் விழா என்று உரிமை பாராட்டியிருக்கின்றார்கள். அங்கிருந்து சைதன்யரின் சீடர்களுடைய செல்வாக்கால் அண்மையில் இந்தியாவின் தென்கோடி வரையிலும் கூட இது பரவியுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் நான் கூறிய படி (1950 - 60 ஆண்டுகளில்) இந்த விழாவிற்கு இரண்டு பெயர்கள் உண்டு ஒன்று தாய்லாந்து மொழியிலும் மற்றொன்று வேறு ஒரு மொழியிலும் உள்ளன. இந்தப் பின்னைய பெயர் (எளிதாகப் புரிந்து கொள்ள முடியாதவொன்றாயினும்) திருவெம்பாவை, திருப்பாவை என்பதேயாகும். இதனை எந்தத் தமிழனும் அந்த நாட்டில் வழங்கப்பெறும் திருவெம்பாவை, திருப்பாவை என்பதன் கொச்சைத் திரிபு வடிவம் என்று எளிதாகக் கண்டு கொள்ள முடியும்.

திருவெம்பாவை, சைவசமயக் குரவர் மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற சைவசமயத் துதிப்பாடல். திருவெம்பாவை தென்னகத்தின் மீராபாயாக விளங்கும் வைணவப் பெண் துறவியாகிய ஆண்டாளால் பாடப்பெற்ற துதிப்பாடல். இவ்விரு பெயர்களின் இந்த இணைவு காஞ்சி காமகோடிபீடத் தலைவராகிய ஸ்ரீசங்கராச்சாரியாரால் தோற்றுவிக்கப்பெற்ற ஒரு பொது இயக்கத்தை நினைவூட்டுகின்றது. அவ்வியக் கத்தின் விளைவாக ஒவ்வொரு இந்துக் கோயிலிலும் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடுகளை நடத்துகின்றது. இது முன் காலத்தே தாய்லாந்து போன்ற பல இடங்களுக்குச் சென்று, அந்நாட்டு மக்களோடு தங்கிச் சேர்ந்து வாழத் தலைப்பட்ட வைணவர்களும் சைவர்களும் இது போன்ற முயற்சியை மேற்கொண்டிருக்கலாம் என்ற குறிப்பினை நமக்கு அளிக்கின்றது.

i) இவ்வுரைநடைப் பகுதி வலியுறுத்தும் முக்கியமான கருத்தைத் தெளிவுபடுத்துக.

ii) தாய்லாந்தில் திருவெம்பாவை, திருப்பாவை வழிபாடு இடம்பெற்றுள்ளமைக்குக் கட்டுரையாசிரியர் குறிப்பிடும் சான்றுகள் எவை?

iii) ஊஞ்சல் விழா பற்றி யாது அறிவீர்?

iv) கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றி யாது கூறுவீர்? *(16 புள்ளிகள்)*

## பகுதி - II

03) அ) 'வினைத்திட்பம்' என்ற அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு, வினைத்திட்பம் என்பதன் மூலம் வள்ளுவர் எதனைக் கருதினார் என்பதைத் தெளிவுபடுத்துக.

ஆ) வினைத்திட்பத்தின் அருமை, சிறப்பு, பயன் என்பன பற்றி வள்ளுவர் கூறுவனவற்றைச் சுருக்கமாகத் தொகுத்துத் தருக.

இ) வினைத்திட்பம் இல்லாதோரின் இழிவு பற்றி யாது கூறப்படுகின்றது?

ஈ) இவ்வதிகாரத்தில் காணப்படும் உவமைகளை எடுத்துக்காட்டி, அவை கையாளப்பட்ட நோக்கங்களை விளக்குக. *(20 புள்ளிகள்)*

04) கைகேயி சூழ்வினைப் படலத்தில் தசரத மன்னன் கைகேயியின் காலில் விழுந்தது முதல் அவள் கூறிய கடுஞ் சொற்களைக் கேட்டுக் கலங்கியது வரையுள்ள பகுதியில்

அ) தசரதன் கைகேயியின் காலில் விழுந்து இரந்து கேட்டவை

ஆ) அதற்குக் கைகேயி கூறியவை

இ) கம்பனால் கையாளப்பட்டுள்ள அணிகள் என்பவற்றைத் தெளிவுபடுத்துக. *(20 புள்ளிகள்)*

05) தேம்பாவணி பைதிரம் நீங்கு படலத்தில்

அ) எகிப்து செல்ல சூசை விரும்பாமைக்கான காரணங்களை விளக்குக.

ஆ) குழந்தை இயேசு, சூசை, மரியாள் ஆகியோர் நகரை விட்டு நீங்கிச் செல்லும் போது அந் நகருக்கு ஏற்பட்ட அவலங்களை வருணிக்குமாற்றினை விளக்குக.

இ) அணிகளைக் கையாள்வதில் வீரமாமுனிவரிடத்துக் காணப்படும் ஆற்றலினைத் தெளிவுபடுத்துக. *(20 புள்ளிகள்)*

06) ஏ. ஜே கனகரத்னாவின் 'விண்மீன்களுக்குத் திரும்ப ஏடுதல்' என்னும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அ) 'வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் விண்மீன்களில் இருந்து அறிவு படைத்த உயிரினங்கள் இவ்வுலகிற்கு வருகை தந்தன. இவர்கள் தான் பின்பு சமயங்களால் தெய்வங்கள் எனப்பட்டனர் என்பதை நிரூபிப்பதற்கு டானிக்கன் முன் வைக்கும் சான்றுகளை விளக்குக.

ஆ) டானிக்கனின் வாதத்தை கட்டுரையாசிரியர் புராண இலக்கியங்களுடன் எவ்வாறு தொடர்புபடுத்தியுள்ளார் என்பதை விளக்குக.

இ) கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றி யாது கூறுவீர்? *(20 புள்ளிகள்)*

07) 'நீண்ட பயணம்' என்னும் நாவலை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ) நாவலின் கதைக் கருவைச் சுருக்கமாகத் தருக.

ஆ) இந் நாவலூடாக நாவலாசிரியர் சமூகத்தில் ஏற்படுத்த விழைந்த மாற்றங்களை விளக்குக.

இ) ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புணர்வு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?

*(20 புள்ளிகள்)*

08) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.

அ) சீறாப்புராணம், மழையழைப்பித்த படலத்தில் முஹம்மது, நபி (ஸல்) அவர்களின் அருட்சிறப்புக்கள்

ஆ) தமிழில், விஞ்ஞான நூல்களின் முன்னோடிகளாக ஈழத்தவர் விளங்கியமை பற்றி பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் கருத்துக்கள்

இ) 'சீபர்ப்பதம்' பதிகத்தில் சிவபெருமானின் பெருமைகள்

ஈ) 'சம்பள நாள்' என்ற கவிதையில் தோட்டத் தொழிலாளர்களிடையே கவிஞர் காணவிழைந்த மாற்றங்கள்

உ) 'யுகசந்தி' என்ற சிறுகதை மூலம் ஆசிரியர் சமூகத்துக்கு முன்வைக்கும் செய்திகள்

*(20 புள்ளிகள்)*